**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 11/2021**

பெயர் : பானுமதி D.W.1. Cross Continuation

க/பெ. : சின்னபிள்ளை

தேதி : 23.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி: -**

1. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 103/2021 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மேற்படி வழக்கை சொத்தை வசம் கோரி தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை நான் எப்போது பாரத்ததேன் என்றால் 2021 ம் ஆண்டு எனது வயலை நடவு செய்தேன். அப்போது சத்தியவான் ராஜ், புண்ணிய தாசன், யாகோப் ராஜ் ஆகியோர் பிரச்சனை செய்தார்கள்.

2. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் எனக்கு சொன்னார்கள் என்றால் எனது வழக்கறிஞர் தான் சொன்னார். (பின்னிட்டு நான் தான் வழக்கறிஞரிடம் கூறினேன் என சாட்சி கூறுகிறார்) பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வாசாஆ 3 ல் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். எனது ஊரை சேர்ந்த நாகராஜை தெரியுமா என்றால் தெரியும். அவர் இறந்துவிட்டார். முனியன் மகன் நடராஜை தெரியுமா என்றால் தெரியும். நாகராஜன், நடராஜன் ஆகியோருக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாவா சொத்தை குப்பம்மாள் என்பவரிடம் 2000 ம் ஆண்டில் அடமானம் வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு ரூபாக்கு அடமானம் வைத்தேன் என்றால் ரூ. 25,000/-ற்கு அடமானம் வைத்தேன். குப்பம்மாள் இறந்த பிறகு அவரது மகன் ராமதாஸ் சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். 2005 ம் ஆண்டு நான் தாவா சொத்தை ராமதாசிடமிருந்து மீட்டுவிட்டேன். 2005 முதல் 2011 ஆண்டு வரை தாவா சொத்தை நான் பயிர் செய்ததற்கான சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2011 ம் ஆண்டு நான் தாவா நிலத்தை சுந்தரம் என்பவரிடம் ரூ.25,000/-ற்கு அடமானம் வைத்தேன். 3 வருடத்திற்கு அடமானம் வைத்தேன். எனது ஒரே மகன் இறந்துவிட்டதால் 2014 ம் ஆண்டு என்னால் நிலத்தை மீட்க முடியவில்லை.

4. சுந்தரம் தாவா சொத்தை சந்திரசேகர் என்பவரிடம் ரூ. 30,000/-க்கு அடமானம் வைத்துவிட்டார். நான் சந்திரசேகர் என்பவரிடமிருந்து தாவா சொத்தை 2020 ம் ஆண்டு மீட்டேன். நான் தாவா சொத்தை மீட்டதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சந்திரசேகரிடம் எனது நிலத்தை மீட்க ரூ.25,000/-ஐ கொடுத்துவிட்டு, ரூ.

5000/-ஐ சுந்தரத்திடம் வாங்கிகொள்ளுமாறு சொல்லிவிட்டேன். சுந்தரம் சந்திரசேகருக்கு ரூ.5000/-ஐ கொடுத்தாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிர் வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்களை எனது வழக்கறிஞரிடம் யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். எனது எதிர் வழக்குரையில் "நான் சந்திரசேகரிடம் ரூ.25,000/-ஐ கொடுத்து நிலத்தை மீட்க முயன்ற போது சந்திரசேகர் என்னிடம் சுந்தரத்திடம் ரூ.30,000/- கொடுத்து அடகு பிடித்ததாக கூறி பிரச்சனை செய்து நிலத்தினை என்னிடம் ஒப்படைக்க முடியாது என கூறிவிட்டார்" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சந்திரசேகர் என்னிடம் நிலத்தை கொடுக்கமுடியாது என்று கூறவிட்டதாக எனது எதிர் வழக்குரையிலேயே கூறியுள்ளதால் நான் 2021 ஆண்டு நிலத்தை நடவு செய்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே தாவா சொத்து வாதிகள் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், தாவா சொத்தை வாதி ஆக்கிரமிக்க முயன்றதாக எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளது உண்மை அல்ல என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஏன் தொடர்ந்து நடத்தவில்லை என்றால் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை நடத்துவதற்கே எனக்கு நேரம் சரியாக உள்ளதால் என்னால் நான் தாக்கல் செய்த வழக்கை நடத்த இயலவில்லை. நான் யார் யாருக்கு எதிராக அசல் வழக்கு எண்103/2021 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் தங்கம், சுந்தரம், நாகூரான், சௌந்தர்ராஜன், சந்திரசேகர், லீலாவதி, சத்தியவான் ராஜ் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்தேன். மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்து எனது சொத்தை திரும்ப தர மறுத்ததால் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி நபர்களின் தாயாரான குப்பம்மாள் என்பவர் என்னிடமிருந்து தாவா சொத்தை கிரய உடன்படிக்கை மூலம் பெற்றுவிட்டதாக கூறி தாவா சொத்தை என்னிடம் ஒப்படைக்க மறுக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை குப்பம்மாளிடம் விற்பனை செய்யவில்லை. தாவா சொத்தை சத்தியவான் ராஜ் என்பவர் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். அதை வசம் கோரி நான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் அசல் வழக்கு எண். 103/2021ல் தான் வசம் செய்தேன். அசல் வழக்கு எண் 103/2021 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. தாவா சொத்தை வாசாஆ 3 ஆன ஆவணம் மூலம் நான் 19.10.1995 ம் ஆண்டு குப்பம்மாள் என்பவரிடம் கிரய உடன்படிக்கையின் மூலம் சொத்தை கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. வாசாஆ 3 ஆன ஆவணத்தின் படி தாவா சொத்தை நான் வாதிகள் வசம் ஒப்படைத்துவிட்டேன் என்றாலும், அன்று முதல் அவர்கள் வசம் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து வாதிகள் வசம் இருப்பதால் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் 1995 ம் வருடம் கிரய உடன்படிக்கையின் படி குப்பம்மாளிடம் கொடுத்துவிட்டபடியால் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.